
உ

ஓம் நமோ நாராயணுய



# ஆழ்வார்கள் அருள் அமுதம்

முரசொலி வெளியீடு

விபவ, புரட்டாதி
1988

உ

ஓம் நமோ நாராயணாய

# ஆழ்வார்கள் அருள் அமுதம்

முரசொலி வெளியீடு
விபவ, புரட்டாதி
1988

உ

ஓம் நமோ நாராயணாய

# ஆழ்வார்கள் அருள் அமுதம்

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்.
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா! உன்
செவ்வடி செவ்வி திருக்காப்பு.

அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு
வடிவாய் நின்வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும்
பல்லாண்டு
வடிவார் சோதிவலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு
படைபோர்புக்கு முழங்கும் அப்பாஞ்ச சன்னியமும்
பல்லாண்டே.

— பெரியாழ்வார்

பரிதியொடணிமதி பனிவரை திசைநிலம்
எரிதியொடெனவின இயல்வினர் செலவினர்
சுருதியொடருமறை முறைசொலும் அடியவர்
கருதிய கணபுரம் அடிகள்தம் இடமே

— திருமங்கை மன்னன்

நிலவொடு வெயில்நில விருசுடரும்
உலகமும் உயிர்களும் உண்டொருகால்
கலைதரு குழவியின் உருவினையாய்
அலைகடல் ஆலிலை வளர்ந்தவனே
ஆண்டாய் உனைக்காண்பதோர் அருளெனக் கருளுதியேல்
வேண்டேன் மனைவாழ்க்கையை விண்ணகர் மேயவனே.

— திருமங்கை மன்னன்

நீ ரகத்தாய்! நெடுவரையினுச்சி மேலாய்!
நிலாத் திங்கள் துண்டத்தாய்! நிறைந்தகச்சி.
ஊரகத்தாய்! ஒண்துறைநீர் வெஃகாவுள்ளாய்!
உள்ளுவாருள்ளத்தாய்! உலகமேத்தும்
காரகத்தாய்! கார்வானத்துள்ளாய்! கள்வா
காமரு பூங்காவிரியின் தென் பால்மன்னு
பேரகத்தாய்! பேராது என்னெஞ்சினுள்ளாய்
பெருமான்! உன்திருவடியே பேணினேனே.

— திருமங்கை மன்னன்

தாயே தந்தை என்றும் — தார
மேகிளை மக்களென்றும்
நோயே பட்டொழிந்தேன் — நுன்னைக்
காண்பதோர் ஆசையினுல்
வேயேய் பூம்பொழில் சூழ் — விரை
யார்திரு வேங்கட வா
நாயேன் வந்தடைந்தேன் — நல்கி
ஆளென்னைக் கொண்டருளே.

— திருமங்கை மன்னன்

செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே
நெடியானே! வேங்கடவா! நின்கோயிலின் வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய் கிடந்து உன் பவள வாய் காண்பேனே.

— குலசேகர ஆழ்வார்

பூநிலாய ஐந்துமாய்ப் புனற்கண் நின்ற நான்குமாய்
தீநிலாய மூன்றுமாய்ச் சிறந்தகாலிரண்டுமாய்
மீநிலாய தொன்றுமாகி வேறு வேறு தன்மையாய்
நீநிலாய வண்ணம் நின்னை யார் நினைக்காவல்லாரே?

சொல்லினல் தொடச்சி நீ சொலப்படும் பொருளும் நீ
சொல்லினல் சொலப்படாது தோன்றுகின்ற சோதி நீ
சொல்லினல் படைக்க நீ படைக்க வந்து தோன்றினர்
சொல்லினல் சுருங்க நின்குணங்கள் சொல்லவல்லரே.

— திருமழிசைப்பிரான் அருளிச்செய்தது

நெடுமை யால் உலகேழு மளந்தாய்!
நின்மலா! நெடியாய்! அடியேனைக்
குடிமை கொள்வதற்கு ஐயுற வேண்டா
கூறை சோறு இவை வேண்டுவதில்லை
அடிமை யென்னுமக் கோயின்மை யாலே
அங்கங்கே அவை யோதரும் கண்டாய்
கொடுமைக் கஞ்சனைக் கொன்று நின்தாதை
கோத்தவன் தளை கோள்விடுத்தானே.

— பெரியாழ்வார்

அம்புலாவும் மீனுமாகி, ஆமையாகி ஆழியார்.
தம்பிரானுமாகி மிக்கது அன்பு மிக்கு அதன்றியும்
கொம்பராவு நுண்மருங்குல் ஆயர்மாதர் பிள்ளையாய்
எம்பிரானும் ஆய வண்ணம் என் கோலோ எம்மீசனே.

— திருமழிசை யாழ்வார்

நடந்த கால்கள் நொந்திவோ? நடுங்கஞாலம் ஏனமாய்
இடந்தமெய் குலுங்கிவோ? விலங்குமால் வரைச்சுரம்
கடந்தகால் பரந்த காவிரிக்கரைக்குடந்தையுள்
கிடந்தவாறு எழுந்திருந்து பேசு வாழிகேசனே!

நின்றதெந்தை ஊரகத்து இருந்தது எந்தை பாடகத்து
அன்றுவெஃகணைக்கிடந்தது எண்ணிலாத முன்னெலாம்
அன்று நான் பிறந்திலேன் பிறந்த பின் மறந்திலேன்
நின்றதும் இருந்ததும் கிடந்ததும் என்நெஞ்சுனே.

மாணிக்கம் கட்டி வயிரம் இடை கட்டி
ஆணிப் பொன்னால் செய்த வண்ணச் சிறுத்தொட்டில்
பேணி உனக்குப் பிரமன் விடுதந்தான்
மாணிக்குறளனே! தாலேலோ வையமளந்தானே!
தாலேலோ.

— பெரியாழ்வார்

ஓதக்கடலின் ஒளி முத்தினாமும்
சாதிப் பவளமும் சந்தச்சரிவளையும்
மாதக்க வென்று வருணன் விடுதந் தான்
சோதிச் சுடர் முடியாய்! தாலேலோ
சுந்தரத்தோளனே தாலேலோ
வையம் தகழியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காக — செய்ய
சுடராழியானடிக்கே சூட்டினேன் சொன்மாலை
இடராழி நீங்குகவே யென்று.

— பொய்கை ஆழ்வார்

வையம் தகழியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காக – செய்ய
சுடராழியானடிக்கே சூட்டினேன் சொன்மாலை
இடராழி நீங்குகவே யென்று

— பொய்கை ஆழ்வார்

அன்பே தகழியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தையிடு திரியா — நன்புருகி
ஞானச் சுடர் விளக்கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ் புரிந்த நான்

— பூதத்தாழ்வார்

திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கனணி நிறமும் கண்டேன் — செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்
என்னாழி வண்ணன் பால் இன்று

— பேயாழ்வார்

ஆலமாமரத்தினிலை மேல் ஒரு பாலகனாய்
ஞாலமேழும் உண்டான் அரங்கத்தரவினணையான்
கோலமாமணியாரமும் முத்துத் தாமமும்
முடிவில்லதோ ரெழில்
நீலமேனி ஐயோ! நிறை கொண்டது என் நெஞ்சினையே.

— திருப்பாணாழ்வார்

கண்ணிநுண் சிறுத்தாம்பினால் கட்டுண்ணப்
பண்ணிய பெருமாயன் என்னப்பனில்
நண்ணித் தென் குருகூர் நம்பியென்றக்கால்
அண்ணிக்கும் அமுதூறும் என்னாவுக்கே.

— மதுரகவியாழ்வார்

முடிச்சோதியாய் உனதுமுகச் சோதி மலர்ந்ததுவோ?
அடிச்சோதி நீநின்ற தாமரையாய் அலர்ந்ததுவோ?
படிச்சோதியாடையொடும் பல்கலனுய் நின்பைம் பொன்
கடிச்சோதி கலந்ததுவோ? திருமாலே கட்டுரையே

ஆராஅமுதே! அடியேனுடலம் நின்பாலன் பாயே
நீராயலைந்து கரைய உருக்குகின்ற நெடுமாலே!
சீரார் செந்நெல் கவரிவீசும் செழு நீர் திருக்குடந்தை
ஏரார் கோலம் திகழக்கிடந்தாய்! கண்டேன் எம்மானே.

— நம்மாழ்வார்

அன்று இவ்வுலகம் அளந்தாய்! அடி போற்றி
சென்றங்குத் தென்னிலங்கை செற்ருய்! திறல் போற்றி
பொன்றச் சகடம் உதைத்தாய்! புகழ் போற்றி
கன்றுகுணிலா எறிந்தாய்! கழல் போற்றி
குன்று குடையாய் எடுத்தாய்! குணம் போற்றி
வென்று பகை கெடுக்கும் நின்கையில் வேல் போற்றி
என்றென்றும் சேவகமே ஏத்திப் பறைகொள்வான்
இன்றுயாம் வந்தோம் இரங்கேலோர் எம்பாவாய்.

— ஸ்ரீ ஆண்டாள்

குடதிசை முடியை வைத்து குணதிசை பாதம் நீட்டி
வடதிசை பின்பு காட்டித் தென்திசை இலங்கை நோக்கி
கடல் நிறக் கடவுளெந்தை அரவணைத்துயிலுமாண்டு
உடலெனக்கு உருகுமாலோ! என்செய்கேன் உலகத்தீரே

தொண்டரடிப் பொடியாழ்வார்